362

தமிழகமும் ஜெர்மானியரும்

280 ஆண்டுக்கால இலக்கிய உறவுகள்

ஜனவரி 4 — 10, 1981ன் போது மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத்தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு-மாநாட்டில் படிக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரை

ஆ. ஞானசேகரன்

ஜெர்மானிய மொழிக்குழு

காரைக்குடி – 623 006

KMM0362

ஆசிரியரின் முகவரி

ஆ. ஞானசேகரன்
விஞ்ஞானி
மைய மின்வேதி ஆய்வகக் குடியிருப்பு
காரைக்குடி - 623 006

173

தமிழகமும் ஜெர்மானியரும்

280 ஆண்டுக்கால இலக்கிய உறவுகள்

ஜனவரி 4 — 10, 1981ன் போது மதுரையில் நடைபெற்ற ஐந்தாவது உலகத்தமிழாராய்ச்சிக் கருத்தரங்கு-மாநாட்டில் படிக்கப்பெற்ற ஆய்வுக்கட்டுரை

ஆ. ஞானசேகரன்

ஜெர்மானிய மொழிக்குழு

காரைக்குடி -623 006

நன்றி

இந்த ஆய்வுக் கட்டுரை சிறப்புற அமைய உதவிய,

1 **தவத்திரு குன்றக்குடி அடிகளார்,**

2 **செல்வி லலிதா அனந்தகிருஷ்ணன்**, மையமின்வேதி ஆய்வகம், காரைக்குடி,

3 **பேராசிரியர் பிச்சைக்கண்**, தமிழ்த்துறை, அழகப்பர் கலைக்கல்லூரி, காரைக்குடி,

4 **பேராசிரியர் க. திருமாறன்,** தமிழ்த்துறை, செந்திக்குமார நாடார் கல்லூரி, விருதுநகர்

5 **நல்லாசிரியர் மீனாட்சிசுந்தரனார்** விக்டோரியா மாணவர் உயர்நிலைப்பள்ளி, சிவகாசி

6 **திரு வால்ட்டர் லைஃபர்**, ஹாங்காங்,

7 **மறைத்திரு அல்பிரெஷ்ட் ஃப்ரென்ஸ்**, உல்ம், மேற்கு ஜெர்மனி,

8 **மறைத்திரு சி. க்ருண்ட்மன்,** இறையியற் கல்லூரி, மதுரை

9 **டாக்டர் யோஹிம் டெப்பர்ட்**, தென் ஆசியக் கழக அலுவலகம், புதிய தில்லி

10 பேராசிரியர் **டாக்டர் எஸ். சீனிவாசன்**, ஹாம்புர்க் பல்கலைக் கழகம், மேற்கு ஜெர்மனி

11 **டாக்டர் அ. தாமோதரன்** துணைப்பேராசிரியர், தென்ஆசியக் கழகம், ஹைடல் பெர்க் பல்கலைக் கழகம், மேற்கு ஜெர்மனி

12 **மறைத்திரு டாக்டர் ஞானராபின்சன்**, முதல்வர், தமிழ்நாடு இறையியற் கல்லூரி, மதுரை

13 **டாக்டர் ரெஜினா ம்யூலென்வேக்,** மாக்ஸ் முல்லர் பவனம், பூனே

14 **மாக்ஸ் முல்லர் பவனம்**, சென்னை.

15 **ஜெர்மன் மொழிக் குழுவினர்**, காரைக்குடி, ஆகியோருக்கும்,

இதனை வெளியிட நிதியுதவி ஈந்த மேற்கு ஜெர்மனி கான்சுலேட் ஜெனரல் சென்னை, அவர்கட்கும்,

வெளியிட அனுமதி தந்த மையமின்வேதி ஆய்வக இயக்குநர் அவர்கட்கும்,

எனது இதயங்கனிந்த நன்றி!

காரைக்குடி - 623006
1-7-1981

ஆ. ஞானசேகரன்

தமிழகமும் ஜெர்மானியரும்

280 ஆண்டுக்கால இலக்கிய உறவுகள்

17ம் நூற்றாண்டின் துவக்கம், ஐரோப்பிய நாடுகள் இந்திய மண்ணின் வெவ்வேறு இடங்களில் காலடி எடுத்துவைத்த காலம்; காலூன்றிய இடங்களில் வேரூன்ற முயற்சித்த காலம். இன்றைய தமிழகமும், கேரளமும் சேர்த்து அன்று மலபார் எனும் பெயரிலே ஐரோப்பியரிடையே வழங்கப்பட்டது. அவர்கள் தமிழ் மொழியை ''மலபார் மொழி'' என்றே குறிப்பிட்டனர். அப்போது ஜெர்மனி தனித்ததோர் நாடாக விளங்கவில்லை. டேனிஷ்மன்னர்களும், ஹோல்ஸ்டைன் கோமான்களும், ஷ்லெஸ்விக் சிற்றரசர்களும் இன்றைய ஜெர்மன் நாட்டுப்பகுதிக்கு ஆதிக்கம் செலுத்திய காலம். 1620ம் ஆண்டு, நவம்பர் மாதம் 19ம் தேதி, தஞ்சை மன்னர் இரகுநாத நாயக்கர், டேனிஷ் மன்னருடன் கொண்ட நட்புறவு உடன்படிக்கையின்படி, சோழ மண்டலக்கடற்கரைக் கிராமமான தரங்கம்பாடியினை, டேனிஷ்காரருக்கு வணிகத்திற்காக வழங்கினார்[1]. அன்று டச்சுக் கொடி, தரங்கம்பாடி வானிலுயர்ந்தது.

அன்றைய ஐரோப்பியர் 'மலபார்' மக்களை நாகரிகம் கொண்டவராகக் கருத வில்லை; அவர்தம் வாழ்வு முறை பண்பட்டதென எண்ணவில்லை; அவரது மொழி இலக்கண-இலக்கியம் படைத்ததென்றும் எண்ணவில்லை. அறியாமையிற் திளைக்கும் கூட்டத்தினருக்குப் புதிய மத உண்மையையும், புதிய நாகரிகத்தையும் தாம் கொண்டு வருவதாக எண்ணினர்.

18ம் நூற்றாண்டுத்துவக்கத்தில், டென்மார்க்கினின்றும் கிறித்துவ சமயம் பரப்பும் சங்கங்கள் தரங்கம்பாடிக்கு வந்தன. ஓர் நாட்டினரிடை ஒருண்மையைக் கூற, அந்நாட்டு மொழியை உணர்வது அவசியமாயிற்று. 'மலபார் மொழி' (தமிழ்) கற்றனர். 1706ம் ஆண்டு அவ்வாறு வந்து தமிழ் கற்றவரே ''பார்த்தலோமியுஸ் சீகன்பல்க்'' எனும் ஜெர்மானியர். லூதர் திருச்சபையைச் சேர்ந்த இவர் இறையியலில் வல்லுநர். தமிழ் கற்கத் துவங்கிய பின்னர், தமிழரையும், தமிழையும், தமிழ் நாகரிகத்தையும் பற்றி, அவர்பெற்ற மனநிலையைத் தன் கடிதமொன்றில் குறிப்பிட்டுள்ளார்[2]. ''.........இம் மக்களிடை (தமிழரிடை) நான் வந்த போது, இவர்கள் மொழி நன்கு வளர்ந்த மொழியாயும், முறையான அடிப்படை இலக்கணம் கொண்டதாயும், இவர்தம் வாழ்வு முறை, வரையறுக்கப்பட்ட நெறியுடனிருக்குமென்றும் நான் கற்பனையிலும் எண்ணியது இல்லை''. பல்வேறு மதபோதகர்கள் இருந்தபோதிலும், மக்களை சீகன்பல்க் மிகவும் கவர்ந்தமைக்குக் காரணம் அவரது நற்பண்புகளேயாம். ''அறநெறி பிறழ்ந்து வாழ்ந்த பல ஐரோப்பியரிடையே, அறநெறிக்கண் நின்று, பிறருக்கு ஓர் எடுத்துக்காட்டாய், தாழ்த்தப்பட்டோர்க்கு நண்பராக வாழ்ந்தார் சீகன்பல்க்'' என ''கெர்மன்'' என்பார், எழுதுகின்றார்.[5]

மேற்கத்திய முறைப்படி, தொன்மையான திராவிட மொழியான தமிழில் முதலாவதாக ஆய்வு துவங்கியவர் சீகன்பல்க். தமிழிற் சிறந்த தேர்ச்சி பெற்று, தமிழிலேயே சிந்திக்கும் அளவு அம்மொழிபேசி வாழ்ந்தவர். தாம் உணவருந்தும் போதும் அவர்தம் செவி தமிழமுதை நுகருமாறு பிறரைத் தமிழ் படிக்கச்சொல்லிக் கேட்டவர்[3].

1711ம் ஆண்டு அவர் எழுதி முடித்த நூல் ''மலபார் மக்களின் புறச்சமயக் கொள்கை'', இந்நூல் நெடுநாள் வெளியிடப்படாமல், 1926ம் ஆண்டு 'காலண்ட்' என்பவரால், நெதர்லந்து நாட்டில் வெளியிடப்பட்டது[4].

தமிழர்கள் வணங்கிய கடவுளர் பற்றி சீகன்பல்க் ஆய்வு நடாத்தினார். அந்த ஆய்வின் விளைவிலெழுந்த நூல் ''மலபார் மக்கள் கடவுளரின் குடிவழிப்பட்டியல்''. இந்நூலை இவர் 1713லேயே முடித்திருப்பினும்கூட, 1867ல், சென்னையில், டாக்டர் கெர்மன் என்பவரால் வெளியிடப்பட்டது[5]. பதினெட்டு அத்தியாயங்கள் கொண்டு விளங்குகின்றது இந்நூல். இதில் தென்னிந்திய இந்துமதம், கடவுளர், வழிபாட்டுமுறை, பாவம், யாத்திரை, உணவு, உண்ணும் முறை, அண்டப்படைப்புக் கோட்பாடு, கலை ஆகியவற்றை விளக்குகின்றார். இந்நூலின் பிரதியொன்றினை, மதுரை இறையியற் கல்லூரி நூலகத்தில் காணலாம். கடவுளரின் பெயர்கள் யாவும் இதில் தமிழிலேயே அச்சிடப்பட்டுள்ளன. 70 நாட்களுக்குள் ஏறத்தாழ 250 பக்கங்கள் கொண்ட இந்நூலினை சீகன்பல்க் எழுதிமுடித்தது வியப்பிலும் வியப்பாகும். இந்துக் கோவில்களுக்குள் சீகன்பல்க் அனுமதிக்கப்படவில்லை. பல மத அறிஞர்களைக் கண்டு, விவரங்கள் கேட்டு எழுதிய நூல் இதுவாம். ஆதி அந்தமில்லா அருட்பெருஞ்சோதி, இலிங்கம், சிவன், பஞ்சகர்த்தாக்கள், மும்மூர்த்திகள், ஈசுவரன், நந்திகேஸ்வரர், பைரவர், குண்டோதரன், துவாரபாலகர்கள், அறுபத்து மூன்று நாயன் மார்கள், தண்டேஸ்வரர், பார்வதி, கங்கை, யமுனை, சரஸ்வதி, சிந்து, நர்மதை, கோதாவரி, காவேரி, மன்னேரி, கன்யா, விக்கினேஸ்வரர், சுப்பிரமணியர், வள்ளியம்மை, தேவயானை, பத்து அவதாரங்கள், விஷ்ணு, மஹாலட்சுமி, பூமிதேவி, அஷ்டலட்சுமிகள், மன்மதன், லவன், குசன், பிரம்மா, சரஸ்வதி, ஆகியோர் பற்றி விவரித்துள்ளார். கிராமத் தெய்வங்களாம் அய்யனார்., எல்லம்மன், மாரியம்மன், அங்காளம்மன், பத்ரகாளி, பிடாரி, சாமுண்டி, துர்கை, ஆகியோர் பற்றிய விவரங்களும் இந்நூலில் உள்ளன. மற்றும் பேய்கள், பூதங்கள், இராட்சதர்கள், அசுரர்கள் பற்றியும், தேவேந்திரன், இந்திராணி, சித்ரகுப்தன் ரிஷிகள், கின்னரர்கள், கிம்புருஷர்கள், கந்தர்வர்கள், சிவதூதர்கள், விஷ்ணு தூதர்கள் அஷ்டதிக்கு பாலர்கள் ஆகியோர் பற்றிய விவரங்களையும் இந்நூலிற் காணலாம்.

தமிழ்க் கடவுளரின் உருவங்களைக் காண விழைந்தார் சீகன்பல்க். படங்களை வரைந்துதர எவரும் முன்வரவில்லை. ஈராண்டுக்காலம் காத்திருக்க நேரிட்டது. ஓவியர் ஒருவர், மற்றவர் அறியாத வண்ணம் படங்களை வரைந்துதர முன்வந்தார். மூன்று மாத காலங்களில் கடவுளரின் படங்களை வரைந்தளித்தார். சரியான உருவுடன், கடவுளரின் இயற்கை வண்ணத்துடன் வரையப்பட்டவை இவை. இந்தப் படங்கள் இன்னும் 'ஹல்லே, நகரின் ஃப்ராங்கே நிலையத்தில் உள்ளதாக அறியப்படுகின்றது.

1714ம் ஆண்டு தமிழகக் கிறித்துவ மக்கள் வரலாற்றில் முக்கியமானதாகும். அவர்தம் மறையாகிய' விவிலியநூல், சீகன்பல்கால் தமிழில் மொழிபெயர்க்கப்பட்டு, தரங்கம்பாடியில் அச்சாகிவெளியானது[6].

சீகன்பல்க் மற்றொரு கடிதத்தில் தான் தயாரித்துவந்த தமிழ் - ஜெர்மன் அகராதி பற்றிக்குறித்துள்ளார். ''... நான் தற்போது ஓர் அகராதியைத் தொகுக்கத் துவங்கியுள்ளேன். தமிழ் மொழியிலுள்ள ஒவ்வொரு சொல்லையும் எழுதி, அதற்கு இணையான லத்தீன் எழுத்துக்களையும் எழுதி, அது எவ்வாறு உச்சரிக்கப்பட வேண்டும் என்பதனையும், அதன் பொருளையும் தந்துள்ளேன். பிற பழம்பெரும் மொழிகள் போன்று இம்மொழியும் ஐரோப்பாவிலே ஆழ்ந்து பயில வேண்டியதொன்று.........அறிவுமிக்க இவர்கள் (தமிழர்கள்) நமது ஐரோப்பிய அறிஞர்கள் திருச்சபை மேடையில் நின்று கொண்டு தரும் வாதங்களையும், பேச்சு முறைகளையும், உளவியலையும் பற்றிக் கூறுவதையும் கேட்பின் எளனத்துடன் நகைத்து, இது போன்ற கலைகள் அனைத்துமே மடமை என்றும், இவ்வாறிருத்தல் உலகில் வருத்தம் தருபவைகளில் ஒன்று எனவும் கூறுவர்''[7].

சீகன்பல்க் எழுதிய தமிழ் இலக்கணநூல் 1716ம் ஆண்டு ஜெர்மனியில் ''ஹல்லே ஆன் த ஸால'' எனும் ஊரில் ''ஆர் ஃபனேஜ்'' அச்சகத்தில் அச்சிடப்பட்டு வெளி வந்தது. இவர்தம் நூலுக்கு நீண்டதோர் லத்தீன் மொழிப் பெயர் தலைப்பாக இருந்தது அதன் :பொருள் ''தமிழ் இலக்கணம்: பல எடுத்துக்காட்டுகள், விதிகள், சொல் அட்டவணை கொண்டது. தமிழ் என்ற மலபாரி மொழியைச் சுலபமாகக் கற்கும் வழி. இம்மொழி கிழக்கிந்தியரிடை பேசப்படுவது: இதுவரை ஐரோப்பாவில் அறியப்படாதது''[8].

சீகன்பல்க் கற்றறிந்த தமிழ் நூல்கள் 161. இவைகளை மலபார் நூல் பட்டியல்'' என்ற பெயரில்,, தான் எழுதிய குறிப்பேட்டிற் குறித்துள்ளார். அந்நூல்களின் பொருள் அடக்கத்தையும் விவரித்துள்ளார்[9]. சீகன்பல்க் 'ஹல்லே' நகரில் உருவாக்கிய தமிழ் நூலகமே ஜெர்மானிய நாட்டு முதற் தமிழ் நூலகமாகும். இதில், இவரே எழுதிய பதினான்கு நூல்கள், ரோமன் கத்தோலிக்க குருமார்கள் எழுதிய 21 நூல்கள், இந்துமத இலக்கியங்கள் 119, முகம்மதிய நூல்கள் 11 ஆகியவை உள்ளன. மார்ட்டின்லூதர் பல்கலைக்கழகத்தின், திருச்சபைச் சுவடிக் கூடத்தில் இவைகள் யாவும் ஒழுங்குறத் தொகுத்து வைக்கப் பட்டுள்ளன. மற்றும் நிறைய ஓலைச்சுவடிகளையும் சேகரித்து 'ஹல்லே' நகருக்கு அனுப்பி வைத்தவர் சீகன்பல்க். அவைகளில் பல படிக்கப்படாமலேயே உள்ளனவாகும். 18ம் நூற்றாண்டுத் துவக்கத்தில் தமிழக இலக்கியம் எவ்வாறிருந்தது, தமிழக மக்கள் எவ்வாறு வாழ்ந்தனர் என்பதை இன்று நமக்குத் தெளிவாயுணர்த்தக் கூடியது இந்நூலகமேயாகும்.

சீகன்பல்க் தொகுத்தளித்த தமிழ் — ஜெர்மன் அகராதி ஏறத்தாழ 40,000 சொற்களையும், சொற்றொடர்களையும் தன்னகத்தேகொண்டது. அன்றைய தமிழ்க்கவிஞர் தம் துணையுடன், 12000 சொற்கள் கொண்ட கவிதை அகராதியையும் உருவாக்கினார். ஆயினும் இவைகள் அச்சிடப்படவில்லை,

பிற்காலத்தே வந்த ஹெர்மன்பேதன் என்பார் தமிழிலக்கண நூலொன்றை ஜெர் மானிய மொழியில் 1943ல் வெளியிட்டவர். இவர் கருத்தாவது:'' இந்திய ஆன்மீகத் துறைக்கு சீகன்பல்க் செய்த தொண்டு அளவிடற்கரியது. அவரது தொண்டின் சிறப்பு அற்றைநாள் ஜெர்மனியில் உணரப்பெறாதது வருந்துதற்குரியது. உணரப்பெற்றிருப்பின், இந்திய கலாசாரம் மேலும் ஓர் நூற்றாண்டு முன்னதாகவே ஜெர்மனியில் அறியப் பெற்றிருக்கும். மேலும், தமிழ் - ஜெர்மன், ஜெர்மன் – தமிழ் அகராதிகள் 200 ஆண்டுகளாக உபயோகத்திலிருந்திருக்கும்''[10].

1707ம் ஆண்டு பெண்களுக்கான பள்ளியொன்று தரங்கம்பாடியில் சீகன்பல்கால் துவங்கப்பெற்றது. இது இந்தியாவின் முதலாவது பெண்கள் பள்ளியாக இருக்கக்கூடும்.

சீகன்பல்கும், அவருடன் இருந்த ஹைன்ரிக் ப்ளுட்சூவ் என்பாரும் தமிழில் திறங்கொண்ட கிறிஸ்துவ சமயம் பரப்பும் தலைமுறையை உருவாக்கினர். அலைகள் இசைபாடும் சிற்றூராகிய தரங்கம்பாடி, திராவிட மொழியான தமிழ் மொழியை ஆராயும் முதல் நிலையமாயும் ஆனது.

1713ல் தரங்கம்பாடித்திருச்சபை தமிழ் அச்சகம் ஒன்றை 'ஹல்லே, நகரினின்றும் பெற்றது. அச்சுக்கள் யாவும் ஹல்லே நகரில் வார்க்கப்பட்டவை. 1719 முதல் 1743 வரைத் தரங்கம்பாடியில் வாழ்ந்தமற்றோர் அறிஞர் பென்சமின் ஷுல்ஸே என்பார். இவர் ஜெர்மன் மொழியினின்று மொழிபெயர்த்த தமிழ்பாடல்களின் தொகுப்பு இன்றும் மதுரை இறையியற் கல்லூரியில் உளது. தெலுங்கு இலக்கண நூலொன்றும், இந்துஸ்தானி இலக்கண நூலொன்றும் இவர் எழுதி முடித்துள்ளார்.

மறைத்திரு ப்ரெஸியர் என்பார்''தமிழ்ச் சொற்றொடர்கள் எனும் ஓர் நூலை, மற்றவர்களுடன் எழுதியவராவர். தரங்கம்பாடியிலிருந்த ஒவ்வொரு மதபோதகருமே தாங்கள் ஹல்லே நகருக்கு எழுதி அனுப்பிய அறிக்கைகளில் தமிழர், தமிழகம், தமிழகப் பறவைகள், தாவரங்கள், போன்ற பல விபரங்களை அனுப்பியுள்ளனர். இந்திய வானவியல் முஸ்லீம்களின் பழக்கவழக்கங்கள் ஆகியவற்றையும் குறிப்பிட்டெழுதியுள்ளனராம். இங்கிருந்து அனுப்பப்பட்ட கடிதங்கள் யாவுமே ஒழுங்குறத்தொகுக்கப்பட்டு, ''ஹல்லேஅறிக்கைகள்'' என்ற பெயரில், மார்ட்டின்-லூதர் பல்கலைக்கழகத்திருச்சபைச் சுவடிக் கூடத்தில் இன்றும் உள்ளன. ''எர்ன்ஸ்ட் வால்ட்டர்'' என்பார் தமிழிலக்கண நூலொன்று எழுதி முடித்தார். முடித்தகாலை, ''பெஸ்கி'' எழுதிய தமிழ் இலக்கணம், தரங்கம்பாடியில் அச்சிடுவதற்காக வந்திருந்தது. அதன் இறுதிப்பகுதியாக வால்ட்டர் எழுதிய இலக்கணம் இணைக்கப்பட்டது.

மறைத்திரு க்ருண்ட்லர் என்பார், 15.1.1715ம் நாளன்று, தரங்கம்பாடியினின்றும் ஹல்லே நகருக்கு எழுதி அனுப்பிய அறிக்கையில், ''தமிழ்மொழி ஜெர்மானியப் பல்கலைக் கழகங்களில் பயிற்றுவிக்கத் தகுதி வாய்ந்தது'' என வரைந்துள்ளார். ''தமிழக மருத்துவம்'' என்ற சிறியதோர் நூலொன்றும் இவர் எழுதியுள்ளார் என அறிகின்றோம். சிகன்பல்கும் அன்றைய தமிழக மருத்துவம் பற்றிய விவரங்கள் பல எழுதியுள்ளார்.

ஆண்டுகள் கடந்தன. தரங்கபாடிக்கு வந்த பழைய ஜெர்மானிய லூதர் திருச் சபையைச் சேர்ந்த யோஹன் ஃபிலிப் ஃபாப்ரிஸியுஸ் என்பாரும், கிறிஸ்டியன் ப்ரைட் ஹாப்ட் என்பாரும், 1779ம் ஆண்டு தமிழ்-ஆங்கில அகராதியை வெளியிட்டனர்[11]. இவ்வாறாக, முதலாவதாக எழுதப்பட்டது தமிழ்-ஜெர்மன் அகராதி; அதற்கு 63 ஆண்டு கட்குப் பின்னர் அச்சாகி வெளி வந்தது தமிழ்-ஆங்கில அகராதி; இந்த இரண்டு அரிய அகராதிகளின் ஆசிரியர்களும் ஜெர்மானியரே.

ஃபாப்ரிஸியஸின் அகராதியில், தமிழில் வழங்கும் இலக்கியச் சொற்கள் மட்டுமின்றி, தமிழ்ப் பேச்சுவழக்கிலுள்ள பல சொற்களும் சேர்க்கப்பட்டுள்ளன. தமிழில் வந்து வழங்கும் வடமொழிச் சொற்கள் உடுக்குறியிட்டுக் காட்டப்பட்டுள்ளன. ஒவ்வொரு சொல்லின் பொருளும் தமிழிலும் ஆங்கிலத்திலும் விளக்கப்பட்டிருத்தலால், அவ்வகராதி, தமிழ் நாட்டிலே வர்த்தகம் செய்த ஆங்கிலேயருக்கும், கிறித்துவ மதப்போதகர்களுக்கும் மிகவும் பயன்பட்டது. இவ்வகராதி 1400 பக்கங்கள் கொண்டது.[12]

ஃபாப்ரிஸியஸின் அகராதி பல முறை மறுபதிப்பாக வெளியிடப்பட்டது. ஒவ்வொரு முறையும் விரிவாக்கப்பட்டது. 1809ம் பதிப்பில் 9000 சொற்களும், சொற்றொடர்களும் இருந்தன. இந்தப்பதிப்பை அடிப்படையாகக் கொண்டே பின்னாளில் வந்த டாக்டர் ராட்லரும், டாக்டர் வின்ஸ்லோவும் விரிவாக்கின தமிழ் அகராதி வெளியானது. டாக்டர் வின்ஸ்லோ இவ்விரிவானதோர் அகராதியை வெளியிட, மிகுந்த முயற்சிகள் மேற்கொள்ள வேண்டியிருந்தது. தன் சொந்தப் பொறுப்பில் ரூ. 5000/- கடன் எழுப்பி அச்சு வேலையை முடித்தார். 1862ல் இவ்வகராதி வெளிவந்தது[13].

யோஹன் பீட்டர் ரோட்லர் (1749 - 1836) ஜெர்மனியின், ஸ்ட்ராஸ்புர்க்கைச் சார்ந்தவர். 1776ல் தரங்கம்பாடிக்கு வந்தார். வந்த ஓராண்டிலேயே தமிழில் சமயச் சொற்பொழிவாற்றத் துவங்கினார். அந்நாளில் ஜெர்மானியத் திருச்சபையைச் சார்ந்த ''பெஸோல்ட்'' என்பார் சென்னை வேப்பேரி ஆலயத்தை நிர்வாகித்து வந்தார். அவரைக் கல்கத்தா பல்கலைக்கழகம் தமிழ்ப் பேராசிரியராக அழைக்க, ரோட்லர் வேப்பேரி ஆலய நிர்வாகத்தை ஏற்றார். ஜெர்மானிய, ஆங்கிலப் பிரார்த்தனைகளைத் தமிழாக்கம் செய்தார். தாவரவியலில் பெருவிருப்பம் கொண்டு தமிழகச் செடிவகைகளை ஐரோப்பியப் பல்கலைக்

கழகங்களின் ஆய்வுக்கு அனுப்பினார். தென்னிந்தியத் தாவர இயலைப்பற்றி ஆய்வுக் கட்டுரைகளும் வரைந்துள்ளார்[14].

1814 ம் ஆண்டு மேற்கு ப்ருஸ்லியாவிலிருந்து சென்னை வந்தவர் ரேனியுஸ். பின்னர் திருநெல்வேலியிலும், பாளையங்கோட்டையிலும் சமயத் தொண்டும், தமிழ்த்தொண்டும் புரிந்தார். இவர் கீழ்க்கண்ட நூல்களை எழுதியுள்ளார்[15].

1. வேத உதாரணத்திரட்டு
2. உருவ வழிபாடு
3. சூரிய மண்டலம்
4. இயற்கையின் நிகழ்வு
5. கால இயலும் வான இயலும்
6. புதிய கோட்பாடு
7. சமயத்தத்துவம்
8. பூமி சாஸ்திரம்
9. தமிழ் இலக்கணம்

இவைதவிர வேறு சில நூல்களும் எழுதியுள்ளார்.

ரோட்லர் போன்றே, டாக்டர் பெர்ன்ஹார்ட் ஷ்மிட் (1787-1857) எனும் சமய போதகரும் தாவர இயலிலும், மொழியியலிலும் ஆர்வங்கொண்டு விளங்கியவர். உதக மண்டலத்தில் தங்கி வாழ்ந்த இவர், தமிழ் நூல்களை ஜெர்மன் மொழியிலும், ஜெர்மன் நூல்களைத் தமிழிலும் மொழிபெயர்த்துள்ளார். இவரது தாவர ஆராய்ச்சி இந்தியத் தாவர இயல் வளர்ச்சிக்கு ஊக்கமூட்டியது[16]. தமது 70ம் வயதில் கல்கத்தாவில் இவர் காலமானது, இந்திய-ஜெர்மானிய தாவர அறிவியலின் இழப்பாகவே கருதப்பட்டது.

ஜெர்மன் நாட்டு ஹல்லே நகரிலிருந்து, 1750ல் தரங்கம்பாடிக்கு வந்த பெரியார், கிறிஸ்டியன் ஃபிரீட்ரிஃக் ஷ்வார்ட்ஸ் (1726-1798). 1765ல் கிறித்துவக்கோவிலும், பள்ளியும் நிறுவினார். ''ஜெர்மன் ஸ்வாமி'' என்று அன்றைய தமிழர்களால் மதிப்புடனும், அன்புடனும் அழைக்கப்பெற்றார்.

தஞ்சை மன்னரான துளசி ஒருமுறை இவரைச் சந்தித்தார். இருவரிடை எழுந்த நட்பு பின்னர் இறுதிவரை நீடித்தது. தஞ்சையிலும் ஷ்வார்ட்ஸ் கோவிலெழுப்பினார். 1785ல் ஷ்வார்ட்ஸ் தமிழுடன் ஆங்கிலமும் சேர்த்துப்படிக்கும் கல்வி முறையை அறிமுகப் படுத்தினார். 50 ஆண்டுகட்குப்பின் மெக்காலே இந்தியாவுக்கு வகுத்தளித்த கல்வி முறைக்கு ஷ்வார்ட்ஸ் முன்னோடியாக விளங்கினார் எனலாம்.

ஷ்வார்ட்ஸின் இறுதி நாட்கள் தமிழ்த் தொண்டிலேயே கழிந்தது. தஞ்சை மராட்டிய மன்னரின் ஒன்றுவிட்ட சகோதரர், தஞ்சையரசரின் தத்துப்புத்திரனான ஸரபோஜிக்கு அரியணை கிடைக்காமல் செய்தார். அப்போது அறிஞர் ஷ்வார்ட்ஸ் நீதிமன்றம் சென்று ஸரபோஜிக்காக வாதிட்டு அவரைத் தஞ்சையின் அரசராக்கினார்.

ஷ்வார்ட்ஸின் மரணத்தில் (1798) பெரிதும் நொந்தவர் ஸரபோஜி மன்னரே, தஞ்சை அரண்மனையிலுள்ள ஷ்வார்ட்ஸ் கிறித்துவக் கோவிலில் அவர்க்கு ஓர் நினைவு சின்னம் இன்றும் உள்ளது. அதில், மரணப்படுக்கையிலுள்ள ஷ்வார்ட்ஸின் கையை ஸரபோஜி தாங்கிக்கொண்டிருக்கின்றார். சிறுவயதிலிருந்தே ஸரபோஜியின் ஆசிரியர் ஷ்வார்ட்ஸ். தன் ஆசிரியர் நினைவாய், ஸரபோஜி எழுதிய உள்ளத்தை நெகிழவைக்கும் ஆங்கிலக் கவிதையொன்றும் அங்கே பொறிக்கப்பட்டுள்ளது. இந்தியாவில், இந்தியரால் புனையப்பட்ட முதல் ஆங்கிலக் கவிதை அதுவே எனலாம். ஷ்வார்ட்ஸின் வாழ்க்கை வரலாற்றினை ''அரசுப் பாதிரியார்'' எனும் நூலாக வெளியிட்டவர் லில்ஜெ எனும் பாதிரியார்[17].

பின்னாளில் வந்த ஃபிரெட்ரிஃக் ருக்கெர்ட் எனும் பாதிரியாரையும் தமிழகம் கவர்ந்தது. 1839ல் இவர் ஜெர்மன்-தமிழ் அகராதியொன்றைத் தொருக்கத் துவங்கினார். 1862 வரை இது முடிக்கப்படவில்லை, இவ்வகராதி கையெழுத்துப் பிரதியாகவே அமைந்து விட்டது; அச்சிடப்படவே இல்லை.

அறிஞர் கார்ல் க்ரவுல் என்பார் பத்தொன்பதாம் நூற்றாண்டின் இடையில், தமிழிலே இலங்கும் 'கைவல்ய நவநீதம்', சிவஞான சித்தியார், போன்ற சில தத்துவ நூல்களை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார். இவரது அரிய முயற்சியின் பயனாய் தமிழர்கள் வழிவழி வளர்த்த தொன்மைமிக்க தமிழின் பயனாய் அமைந்த அறிவு, நுட்பம், தெளிவு, திட்பம், செப்பம், பண்பு நலன் சால்பு, ஒழுக்கம் ஆகியவற்றை மேலை நாட்டவர் அறிந்து மதித்திட வழிபிறந்தது. தனது உதவிக்கு இருவரை வைத்துக்கொண்டு தமிழ் நூல்களின் பிரதிகள் பலவற்றைக் கைப்பட எழுதினார். 1850ம் ஆண்டினையொட்டி, இவர் சேகரித்து ஜெர்மனிக்குக் கொண்டு சென்ற நூல்கள் 150 ஆகும். இந்தத் தமிழ் நூல்களின் பட்டியல் ஒன்றினைத் தயாரித்து[18] அதனை ஜெர்மன் மொழியில் வெளியிட்டார். இந்த நூல்களை வைத்துத் ''தமிழ் நூலகம்'' ஒன்றினையும் உருவாக்கினார். இலக்கணம், புராணம், நாடகம், இறையியல், மருத்துவம், ஒழுக்கதத்துவம், மக்கள் மரபாராய்ச்சி, உணர்ச்சிப்பாடல்கள், மொழியின் பல்வேறு சொற்கள் பற்றிய விவரங்கள் ஆகிய பல துறைகளிலுமுள்ள அரிய நூல்கள் இந்நூலகத்தே உள்ளன என்று அறிகின்றோம். ஜெர்மனியின் முதற் தமிழ் அச்சகம் ஹல்லே நகரில் அமைக்கப்பட்டிருந்தது. லைப்சிஃக் நகரிலும் தமிழ் அச்சகம் ஒன்றினை நிறுவியவர் க்ரவுல் ஆவர். அன்றைய ஜெர்மானியப் பத்திரிகைகளில் தமிழர் பற்றியும், தமிழகம் பற்றியும் கட்டுரைகள் பல வரைந்துள்ளார். அவைகளிற் சிலவாகக் கீழ்க்கண்டவற்றைக் குறிப்பிடலாம்: 1) உலகின் துவக்கம் பற்றி இந்துக்களின் கருத்து 2) இந்துக்களின் கடவுளர்கள் 3) கிழக்கிந்தியக் கொள்ளையர்கள் 4) இந்துக்களின் சுவர்க்கம் 5) இந்தியப் பழமொழிகள் 6) திருமணவாழ்வு 7) சாதி 8) ஆலமரம் 9) தென்னிந்திய மக்கட்தொகை, கார்ல் க்ரவுலின் தமிழ் நூலகம் இன்றும் லைப்சிஃக் நகரில் உள்ளதாக அறிகிறோம். அங்கு சென்று அவைகளைக் கண்டால்தான், அவைகள் யாவுமே இன்றைய தமிழகத்தில் நம்மிடை உள்ளனவா? - இல்லை, அவைகளில் சிலவற்றை நாம் தற்போது இழந்து விட்டோமா என்ற உண்மைகள் தெரியவரும்.

க்ரவுலின் தமிழ் நூற்பட்டியலில் மூன்றாம் பகுதியே திருக்குறள். திருக்குறளின் ஜெர்மன் மொழிபெயர்ப்புக்கு ''திருவள்ளுவரின் குறள்: மனிதனின் மூன்று குறிக்கோள்கள் பற்றிய நீதி நூல்'', எனப் பெயரிட்டார். அந்நூலை ''லைப்சிஃக்கில் வாழும் இந்தியாவின் நண்பர்களுக்குத் தனது பரிசு'' என்று குறிக்கின்றார் ''முத்தான முத்தென்று'' குறளைப் போற்றியவர் கிரவுல் ஆவர்.

குறளை ஆழ்ந்து வியந்து கற்றவர் அல்பர்ட் ஷ்வைட்ஸர். அன்பும், அறனும் நிறைந்த வாழ்வின் இன்ப இசையே குறள் என்பது அவர் கருத்து. ஜெர்மானியர் பலர் வியந்து பாராட்டிய இந்தியநூல் பகவத்கீதை. இதனை மொழி பெயர்த்துள்ள ஜெர்மானியர் பலர். எனினும், அக்கீதைக்கு மேலாகக்குறளைப் போற்றியவர் ஷ்வைட்ஸர் அவர் இது பற்றி வரைந்துள்ளதாவது: ''கீதை, உலக வாழ்வினையொத்து, செயற்துடிப்பு மிக்க வாழ்வில் விடாமுயற்சியைக் கட்டாயமாக்கி, வைராக்கியமுடைய ஓர் நிலையை வலியுறுத்துகிறது. ஆனால், குறளில்தான் எத்தனை முன்னேற்றம்! குறளின்படி, ஒருவன் செய்யும் எத்தொழிலும் தன்னளவில் உயர்ந்ததாயும், உன்னதமாயும் அமைகிறது''[19]. 1803ல் திருக்குறள் பற்றியதோர் ஆய்வுக் கட்டுரை வரைந்து வெளியிட்டவர், எ.எஃப்.கேமரர் என்பார். ''திருவள்ளுவரின் கவிதைகளும் வாழ்க்கைக் கோட்பாடுகளும்'' என்ற இக்கட்டுரை 1803ல் ந்யூரென்பெர்கில் வெளியானது. தமிழரின் பொற்காலமாகிய மதுரைச் சங்க காலம் பற்றி, ஜெர்மானியருக்கு ஜெர்மானிய மொழியிலேயே எடுத்துரைத்தவர் கேமரர். ஜெர்மானியர் பலரிடையே, ''இந்திய இலக்கியமென்றாலே அது சமஸ்கிருத இலக்கியமே'' என்ற கருத்து இருந்து வந்தது இருப்பினும் சமஸ்கிருத மேதைகளாகவும் திராவிட மொழிகளின் ஆய்விலும் சிறந்து விளங்கியவர்கள், ஃப்ரீட்ரிக் ருய்க்கெர்ட், ஆய்கன் ஹுல்ட்ஷ் ஆகிய இருவராவர். ருய்க்கெர்ட், 'ஜெர்மன்-தமிழ் அகராதி' யொன்றினை எழுதினார். எனினும், சிகன்பல்கின் 'தமிழ்-ஜெர்மன் அகராதி' போன்று, இதுவும் அச்சிடப்படவில்லை.

1847ல், ருய்க்கெர்ட் திருக்குறளை ஜெர்மன் மொழியில் மொழிபெயர்த்தார் எனும் கருத்து, தமிழகத்திற் சிலரிடையே நிலவுகின்றது. எனினும், அதற்குச் சான்றுகளில்லை என லேமன் தன் கட்டுரையிற் குறிப்பிடுகின்றார். ஆய்கன் ஹுல்ட்ஷ் என்பார் (1857- 1927) மிகச் சிறந்த சமஸ்கிருத ஆய்வாளரும், கல்வெட்டு ஆய்வு நிபுணரும் ஆவர். 1896ம் ஆண்டு, தென்னகக் கோவில்கள் பலவற்றிற்குச் சென்று கல்வெட்டுகளை ஆராய்ந்தவர். இவரது முயற்சியின் பயனாக விளைந்த நூல் ''தென்னிந்தியக் கல்வெட்டுக்கள்''. மூன்று பாகங்கள் கொண்ட இந்நூல் 1900ம் ஆண்டினையொட்டி வெளி வந்தன. இந்தியாவிலேயே வாழ்ந்து மறைந்த மற்றோர் ஆசிரியர், டபுள்யு. க்ராஃபே என்பார். இவர் எழுதிய ''தமிழக இலக்கிய வரலாற்றில் மைல்கற்களாக விளங்கும் தெய்வக் கதைகள்'' எனும் கட்டுரையில், சங்ககாலத்தின் பொற்காலம் கி.பி. 600 - 1000 என்று கூறியுள்ளார். 1942ல் ''நன்னூலை'' இவர் ஜெர்மனில் மொழிபெயர்த்தார்.

இவ்வாறாகத் தமிழாராய்ச்சி நீண்ட நாட்கட்கு முன்பாகவே ஜெர்மனியில் இடம் பெற்றது. ஆராய்ச்சிகள் தொடர்ந்தன. அதிற் குறிப்பிடத்தக்கதொன்று ஹெச். நவ் என்பார் 1919ல் வெளியிட்ட நூலான ''பட்டினத்துப் பிள்ளையார் பாடல்: ஓர் அறிமுகம்''. ''நவ்'' என்பார், பேராசிரியர் ஹுல்ட்ஷின் மாணவராவர். இவரது ஆய்வுக்கட்டுரைத் தலைப்பு, ''பட்டினத்துப் பிள்ளையார் பாடல்'' என இருப்பினும், அதில் குறித்த பாடல்களின் ஜெர்மன் மொழிபெயர்ப்பு எதுவும் அதில் இல்லை; தமிழ் இலக்கிய வரலாறேயாகும். பல இலக்கியங்களின் பெயர்களும், அவைகளின் உள்ளடக்கங் களையுமே தமது ஆய்விற் கூறியுள்ளதாக லேமன் தன் கட்டுரையொன்றிற் குறிப்பிட்டு உள்ளார்.

தமிழுக்குத் தொண்டாற்றிய மற்றுமோர் பெருந்தகை தந்தைபாலினுஸ் (1748 - 1806). இவரது இயற்பெயர் யோகன் ஃபிலிப் வெஸ்டின் என்பதாம். கிழக்கு நாட்டு மொழிகளைக் கற்க விரும்பி மேற்குக் கடற்கரையை 1774ல் வந்தடைந்தார். 14 ஆண்டுகள் இங்கிருந்தார். ஜெர்மானிய மதகுருவான இவர், இத்தாலிய மொழியில் எழுதி வெளியிட்ட நூல் ''கிழக்கிந்தியப் பயணம்''[20].

இத்துடன் மட்டுமன்றி தமிழ் - ஆங்கில - போர்ச்சுக்கீசிய இலக்கண நூலும் எழுதினார். வடமொழி இலக்கண நூலொன்றும் எழுதி 1790ம் ஆண்டு ரோமாபுரியில் அச்சிட்டார். இந்நூல் தேவநாகரி எழுத்தில் அல்லாமல் தமிழ் எழுத்துக்களாலானது. தமிழ் - கிரந்த கலப்பு அகர வரிசையைப் பயன்படுத்தி இது அச்சிடப்பட்டிருக்க வேண்டும். அக்காலத்தே, தென்னாட்டில் சமஸ்கிருதம் கற்றோர் இம்முறையைப் பின்பற்றியிருக்கலாம். அம்முறையை அவர் கையாண்டார் எனலாம். இந்திய - ஜெர்மானிய மொழி இயல்களையும் ஒப்பிட்டு ஆராய்ந்தார். இவ்வாறு மொழிஇயல் ஆய்விலும் முன்னோடியாக விளங்கினார்.

தென்னிந்தியாவைப் பற்றிய ஜெர்மானிய நூல்கள், மொழியியல் மட்டுமின்றி, திராவிடர் வரலாறு பற்றிய ஆய்வுகள் கொண்டதாயுமுள்ளது. திராவிடர் எங்கிருந்து வந்தனர் என்பது இன்னும் ஓர் தர்க்கத்திற்குரிய கேள்வியாகவே உள்ளது. இதுபற்றி ஜெர்மானிய அறிஞர்கள் வெவ்வேறு கருத்துக்கள் கொண்டிருந்தனர். ஆட்டோ ஷ்ராடர் என்பார் அடையாறு நூல் நிலையத்தில் பொறுப்பாளராக இருந்தவர். பின்னர் கீல் பல்கலைக்கழகத்திலே சமஸ்கிருத விரிவுரையாளராயிருந்தவர். திராவிடர் - முண்டர்களின் மொழிகளிலே உரல் - அல்டெய்க் மூலம் உண்டா என ஆராய்ந்துள்ளார்' இந்திய - ஈரானிய கலாசாரப் பத்திரிகையொன்றில் இதுபற்றிக் கட்டுரை வரைந்துள்ளார்[21].

ஃப்ரீட்ரிஃக் ருய்க்கெர்ட் எனும் கவிஞர் திராவிட - ஃபின்னிஷ் மொழிகளினிடையுள்ள தொடர்புதான் திராவிட - முண்டர்கள் மொழிகளின் உறவுக்குக் காரணம் என்று கருத்துத் தெரிவித்துள்ளார். பேராசிரியர் ஹைனகெல்டர்ன் என்பார் ஈரானே திராவிடரின் தாயகம் என்ற கருத்துக் கொண்டுள்ளார். பி. டபிள்யு. ஸ்மித் என்பாரின் நினைவு மலரில் இக்கருத்தை வெளியிட்டுள்ளார்[22].

செக்கோஸ்லோவிய நாட்டின் ப்ராக் நகரில் வாழ்ந்த ஹ்ரோஸ்னி எனும் அறிஞர், திராவிடர்கள் இந்திய – ஜெர்மானிய இனத்தவர் என்ற கருத்தை வெளியிட்டுள்ளார்[23], இதே கருத்தை ஐக்ஷ்டெட் என்பாரும் தெரிவித்துள்ளார்[24].

திராவிடர் மொழிபற்றி நூலொன்று எழுதியவர் க்ளெமென்ஸ் ஷ்யோனர்[25]. இந்நூலில் மொழியியலிற் தோன்றும் சிக்கல்கள் பற்றிக் கூறுகின்றார், திராவிடப் பெயர்களைப் பற்றி நன்கு எடுத்துரைக்கின்றார். தமிழ்ப் பெயர்களை ஒரு நூலிலிருந்து மற்றொரு நூலுக்கு மாற்றி எழுதுவது கடினமானது என்கிறார். உதாரணமாக, தமிழிலுள்ள "சோழர்" என்ற சொல் கிரேக்க மொழியில் ''சோரர்'' எனவே எழுதப்பெறும் (CHOLA = SORA) ''ல'' கரமும் ''ழ''கரமும் இடம் மாறுவது பல மொழிகளில் காணப்பெறுவது. இதை பாய்டிங்கர் அட்டவணையிலும் காணப்பெறலாம். இந்த அட்டவணையில் SCYTHIA DYMIRICE எனும் சொற்கள் தமிழரை நினைவுறுத்துகின்றன.

இந்த அட்டவணை 4ம் நூற்றாண்டிலே ரோமானியரிடை வழங்கப்பட்டது. இது முன்னொருமுறை கோன்ராட் பாய்டிங்கர் வசமிருந்தது, ரோமானிய– இந்திய உறவுத் தன்மையை இவ்வட்டவணையால் உணரலாம். இருவரிடையே ஊடாடிய வாணிபம், மொழி, பண்பாடு, சமயம், அரசியல் முதலிய செய்திகளைத் தெரிவதற்கு இது பெரும் உதவி செய்யலாம்.

இந்திய மண்ணின் மிகப் பழமையான இலக்கியம் திராவிடரதே என்பது வால்டர் லைஃபரின் கருத்து.''நாட்டின் கதைகள், இதிகாசங்கள் யாவுமே அற்புதமான பாடல்களாக அமைந்திருந்தன. இவைகளைப்பாடி வாழ்ந்தவர்கள் பாணரும் புலவரும் ஆவர். இத்தகையதோர் பண்டையநாகரிகம் தமிழகத்திலே இருந்தது. கிரேக்க நாட்டிலும் இதற்கு இணையாகவே ஜெர்மனியிலும் இருந்தது", என லைஃபர் மேலும் கூறுகின்றார்.

திராவிட இலக்கிய வரலாற்றினை நன்கு ஆராய்ந்தவர் ஹில்கோ வியார்டோ ஷோமரூஸ் என்பார் [26]. இந்திய இலக்கியங்கள் பற்றி இவர் எழுதிய நூல்கள் பேராசிரியர் ஹெல்முத் ஃபான் க்ளஸென்அப் என்பரரால் படிப்பிக்கப்பட்டது. இந்தியஇலக்கியவரலாற்றில் தென்னக இலக்கியத்தின் தனித்தன்மையை இவர் உணர்ந்து, வியந்து பாராட்டியுள்ளார். ஆயிரமாயிரம் ஆண்டுகளாய் வழிவழியாக வந்த திராவிட நாகரிகத்தினை வியந்து பாராட்டியவர் ஷோமரூஸ்; ''தமிழரின் பெருமை அவரது நீதி நூல்களேயாம். அவைகள் எழுதப்பட்டுள்ள அமைப்பும், அதன் கருத்துக்களும் சீர்படைத்தன; நினைவிற்பதியும் சிறு வாக்கியங்களில் ஒரு வரியாக, இருவரிகளாக அல்லது நான்கு வரிகளாய் அமைந்துள்ளன. உவமைகளையும், உருவகங்களையும் கொண்டதாய், வாழ்வு முறைத் தத்துவங்களை விளக்கு கின்றன''. இந்தியாவையும் கிறித்துவ மகத்தையும் பற்றிய தமது நூலின் முதற்பகுதியில், இந்தியாவின் பக்தி முறைபற்றி ஷோமரூஸ் வியக்கின்றார். அவரது எழுத்துக்களில் பக்தி வழிபாட்டிற்கு அவரளித்த சிறப்புத் தெரிகிறது. காரைக்காலம்மையார், ஆண்டாள் ஆகியோரின் பக்திப்பாடல்களை மொழிபெயர்த்துள்ளார். இப்பாடல்களில் காரைக்காலம்மை யாரும், ஆண்டாளும் இறைவன்மீது கொண்ட ஆழ்ந்த பக்தியைச் சுட்டிக்காட்டுகின்றார். இத்தகைய பக்தி நெறி தமிழகத்தினின்றே இந்தியாவின் வடபகுதிக்குப் பரவிற்று என்பது ஷோமரூஸின் கருத்து [27]. ஷோமரூஸ் காலமானபோது, அச்சிடாமல் விட்டுச்சென்ற கையெழுத்துப் பிரதிகள் சுமார் 1000 பக்கங்கள் கொண்டனவாம். அவைகளில் நாம் காண்பன, விநாயக புராணம், சிவஞானசித்தியார், சிதம்பரமகாத்மியம் ஆகும். மார்ட்டின் லூதர் பல்கலைக்கழகத்தில், பேராசிரியர் ஷோமரூஸிற்குப் பின்னர் வந்த திராவிட இயற்-பேராசிரியர், மறைத் திரு ஆர்னோ லேமன் ஆவர். இவர் தனது ''டாக்டர்''பட்ட ஆராய்ச் சிக்கு மேற் கொண்ட பொருள் ''தமிழரின் பக்தி இலக்கியங்களில் சிவபக்தி'' என்பதாகும். இதில் நால்வர் தேவாரப்பாடல்களின் மொழி பெயர்ப்பையும் காணலாம்.

தனது பேராசிரியர் கூறியதற்கிணங்க தாயுமானவர் பாடல்கள் முழுவதையும் ஜெர்மானிய மொழியில் மொழிபெயர்த்தார். சீர்காழியில் வாழ்ந்தபோது மண்ணெண்ணெய் விளக்கின் ஒளியிலே எழுதப்பட்டது இம் மொழிபெயர்ப்பு என லேமன் குறிப்பிடுகின்றார் இவர் தமிழகத்தில் வாழ்ந்த காலம் 1926 - 1934 ஆகும்

மேற்கு ஜெர்மன் நாட்டில் தமிழ் கற்பிக்கும் இடங்களில் முக்கியமானது ஹைடல் பெர்க் பல்கலைக்கழகமாகும். 8 நவீன இந்திய மொழிகள் இங்கு கற்பிக்கப்படுகின்றன இவைகளில் தமிழ் இரண்டாவதாக முக்கியத்துவம் பெற்றுள்ளது. மேலும் மேலும் ஜெர்மானிய மாணவர்கள் விரும்பும் மொழியாய்த் தமிழ் விளங்குகிறது. பேராசிரியர் ஸ்வெலெபில், டாக்டர் அ. தாமோதரன் ஆகியோரின் மேற்பார்வையில் பட்ட மேற்படிப்பு ஆய்வுகளும் நடக்கின்றன. கீழ்காணும் தலைப்புகளில் ஆய்வுகள் தற்போது நடத்தப் படுகின்றன.

1) மலையனூர் அங்காளம்மன்
   (செல்வி. எவெலின் மேயர்)

2) ஈ. வெ. ராமசாமிப் பெரியாரும், அரசியல் இலக்கியங்களும்
   (செல்வி டாக்டர் ஹெல்மன்)

3) நீலகிரி மொழிகளின் அகராதி
   (டாக்டர் டி. கப்., பேராசிரியர் கமில் ஸ்வெலெபில்)

4) ரமண மகரிஷி

5) ஜெயகாந்தன் சிறுகதைகள்

டாக்டர் தாமோதரன் ஜெர்மன் மொழியில் வெளியிட்ட கட்டுரைகளாவன:

1) தமிழில் அகராதிகள் : ஓர் நூலடங்கல்
வீஸ்பாடன் 1979 (பி. எஸ். எ. எஃப் 50)

2) நன்னூல் மூலமும் குழந்தைத்தம்பிரான் உரையும்.
வீஸ்பாடன் (ஷ்டைனர்) 1980.
பி. எஸ். எ. எஃப். 58

3) திருக்குறள் மேற்கோள் விளக்கம் (1970)

4) திருக்குறள் இலக்கணம் (1972)

டாக்டர் சுப் என்பார் நீலகிரி மக்களின் வாழ்வினை நன்கு ஆராய்ந்து ஆராய்ச்சிக் கட்டுரைகள் பல வரைந்துள்ளார். ஆலுகுறும்பர்களின் மொழிபற்றியும் ஆய்வுகள் நடத்தியுள்ளார்.

இன்றைய நவீன தமிழிலக்கியங்கள் சிலவற்றை டாக்டர் தாமோதரனும், செல்வி ஹெல்மனும் ஜெர்மன் மொழியில் மொழி பெயர்க்கின்றனர், இவைகள் விரைவில் வெளியாக உள்ளன.

கொலோன் பல்கலைக் கழகம்:

பேராசிரியர் யானர்ட்(K.L.Janert) அவர்கள் தலைமையில் இயங்கிவரும் இந்தியவியல் துறை, 1968ஆம் ஆண்டு முதல் தமிழ்கற்கும் வாய்ப்பினை ஜெர்மானிய மாணவர்க்கு வழங்கிவருகின்றது, 1972 முதல் டாக்டர் பா.ரா. சுப்பிரமணியன் தமிழ்த்துணைப் பேராசிரியராகப் பணியாற்றிவருகிறார். போசிரியரின் முழு ஆதரவும், நல்ல நூல்நிலையமும் தகுதியுள்ள தமிழாசிரியரும் இருந்தும் மாணவர்களிடையே தமிழைக் கற்பதற்குரிய ஆர்வம் போதிய அளவு இல்லாததால், தமிழைக் கற்பிப்பதைவிட, ஆராய்ச்சித் திட்டங்களுக்கே தற்போது அங்கு முதலிடம் தருகின்றனர். பிறமொழியாளர் நன்கு தமிழ்பயில, இரு மொழியகராதிகள் இன்றியமையாதன, இதனையுணர்ந்த பேராசிரியர் யானர்ட், 1862ஆம் ஆண்டில், வின்ஸ்லோ பாதிரியாரால் தொகுத்து வெளியிடப்பட்ட தமிழ்-ஆங்கில அகராதிக்கு மறுபதிப்பொன்றை வெளியிட்டார். இன்றைய தமிழினை முழுமையாக விளங்கிக்கொள்ள இந்த அகராதியும் ஓரளவே உதவமுடியும் என்பது தெளிவானதும், புதிதாக ஓர் தமிழ் ஆங்கில அகராதியை உருவாக்கும் திட்டத்தினையும் மேற்கொண்டார். இந்த அகராதித் திட்டத்தில் டாக்டர் சுப்ரமணியனுடன் பணியாற்றக் கேரளப் பல்கலைக்கழகத் தமிழ் விரிவுரையாளர் டாக்டர் கி. நாச்சிமுத்து என்பாரும் உதவிவருகிறார். நான்கைந்து ஆண்டுகளாகச் செயற்பட்டுவரும் இத்திட்டம் இன்னும் சில ஆண்டுகள் தொடரும்.

ஹாம்புர்க் பல்கலைக் கழகம்

1970ம் ஆண்டு டாக்டர் ஹெல்கா அன்டோன், இந்தியக்கலைவரலாற்றுத்துறையில் பணியேற்ற பின்பு தமிழ் கற்பித்தல் சிறப்பாக அங்கு ஊக்குவிக்கப்பட்டது இதற்கு முன் அங்கு வடமொழித்துணைப்பேராசிரியராக இருந்த டாக்டர் சீனிவாசன் பழந்தமிழ்ச் செய்யுட்கள் சிலவற்றை, மாணவர்களின் ஆர்வத்தைப் பொறுத்து அவ்வப்போது அறிமுகப்படுத்திவந்தார். டாக்டர் அன்டோன், பாரதியாரைப்பற்றி ஆராய்ச்சி செய்தவராவார். தமிழகத்திற் தங்கி, பேரறிஞர் கி. வா. ஜகந்நாதனிடம் இலக்கியத்தமிழ் கற்றார். ஆரம்ப வகுப்பு முதல், இலக்கிய வகுப்புவரை அனைத்து நிலைகளிலும் தமிழை அறிமுகப்படுத்தி, ஹாம்புர்க் பல்கலைக் கழக மாணவரிடைய தமிழார்வத்தைத் தூண்டிய

பெருமை திருமதி அன்டோன் அவர்களையே சாரும். இவர் அங்கே பணியாற்றிய ஏழு ஆண்டுகளில், ''பத்தொன்பதாம் நூற்றாண்டிற்குப் பின் தமிழிலக்கிய வளர்ச்சி'' ''வானொலி- பத்திரிக்கை முதலிய செய்தித்துறைகளில் பயன்படுத்தப்படும் தமிழ் நடை'' ஆகிய தலைப்புகளில் சிறப்புரையாற்றினார், பத்திரிக்கைத் தமிழைத் தொடர்ந்து கற்பித்த அனுபவம் காரணமாக, 1975-ல், தம் மாணவி திருமதி D. ஹெல்மன் என்பவரோடு இணைந்து ''Tamil Usage in Mass Media'' எனும் நூலொன்றைத் தமிழியலுக்கு வழங்கியுள்ளார்

மதுரைக்கண்ணமைந்துள்ள இறையியற் கல்லூரி, ஜெர்மானிய அறிஞர்கள் தங்கி தமிழாராய்ச்சி செய்யும் ஓர் இடமாயமைந்துள்ளது. 1975ம் ஆண்டு இங்கு வந்து ஜெர்மன் மொழி கற்பித்த ஆசிரியர் மறைத்திரு டாக்டர் அல்பெரெஷ்ட் ஃப்ரென்ஸ் என்பார். இவர் தங்கியிருந்த இரு ஆண்டுகளில் திருவாசகத்தை ஜெர்மனில் மொழிபெயர்த்தார். இப்பணியில் மதுரை திரு. நாகராஜன் என்பார் உதவி செய்துள்ளார். ஜெர்மன் பதிப்பு காரைக்குடியில் 1977ல் அச்சானது. அதே ஆண்டில் ஃப்ரென்ஸ் திருக்குறளையும் ஜெர்மன். மொழியில் மொழிபெயர்த்தார். இதன் துணை ஆசிரியை செல்வி லலிதாம்பாள் என்பார். ஜெர்மன் மொழியில் எழுதப்பட்ட திருக்குறள் மதுரையில் அச்சிடப்பட்டது. இவ்விரு ஜெர்மானியப் பதிப்புக்களையும் படித்துச் சீர்திருத்தி சிறப்புற அமைய உதவியவர் டாக்டர் திருமதி ரெஜினா ம்யூலென்வேக் என்பார். தற்போது இவர் பூனே நகரிலுள்ள மாக்ஸ்ம்யுலர் பவனத்தில் ஜெர்மன் விரிவுரையாளராகப் பணியாற்றுகிறார்.

இறையியற் கல்லூரி நூலகம் அரியபல நூல்களைத்தன்னகத்தே கொண்டு விளங்குகின்றது மொழியியல் ஆய்வாளருக்கு உதவக்கூடிய நூல்கள் பல இங்குள்ளன. கிரேக்க, லத்தின், உருது, ஜெர்மன், ஹிப்ரு, சமஸ்கிருதம், ஃப்ரெஞ்ச் மொழி நூல்களில் பழமையானவைகளும் உள்ளன. பண்டைய தமிழர் வரலாற்றுக் குறிப்புகளை இவைகளின் மூலமாகவும் அறியலாம். இக்கட்டுரையில் குறிப்பிடப்படும் நூல்கள் சிலவும் ஆங்குள்ளன. தனி அட்டவணையில் அந்நூற்களின் பெயர்கள் தரப்பட்டுள்ளன.

பிற்குறிப்பு:

1 தமிழ் ஆய்வாளர்கள், குறிப்பாக மொழியியற்துறை வல்லுநர்கள், லத்தீன், போர்ச்சுக்கீஸ், டச்சு, ஜெர்மன், ஃபிரெஞ்ச், இத்தாலியன் போன்ற மொழிகளிலும் புலமை பெறுதல் வேண்டும். தமிழ் - தமிழர் -தமிழகத்தின் வரலாறுகள் இம்மொழிகளில் எழுதப்பட்ட பண்டை நூல்களில் புதைந்து கிடக்கின்றன.

2 ஜெர்மானிய அறிஞரால் எழுதப்பெற்றதும், இக்கட்டுரையில் குறிப்பிடப்பட்டதுமான நூல்களைத் தேடிக் கண்டு கொள்ள வேண்டும். இதற்கு பல்கலைக்கழகங்களின் முயற்சியும், அரசின் துணையும் வேண்டும். இந்நூல்கள் ஜெர்மானிய, டச்சு நூலகங்களில் உள்ளன.

3 இந்த ஜெர்மானிய நூல்கள் தமிழாக்கம் செய்யப் பெறின் பல புதிய வியத்தகு உண்மைகள் வெளிப்படலாம்.

4 தமிழ் — ஆங்கிலஅகராதி வெளியிடப்பட வேண்டும் அதுபோன்று, காலப்போக்கில், தமிழ் ஜெர்மானிய, தமிழ் - போர்ச்சுக் - கீஸிய, தமிழ் - லத்தீன், தமிழ் - ஃபிரெஞ்ச், தமிழ் - சமஸ்கிருத அகராதிகளும் வெளியிடப்பட வேண்டும்.

இத்தகைய நடவடிக்கைகளால் தமிழர் அறிவு மேம்பாடும், தமிழ் இலக்கிய வளர்ச்சியும் ஏற்படும்.

நூற்பெயர்கோவை

1 மறைத்திரு ஸாண்டகிரன், ஆர். ,
தரங்கம்பாடியின் பாடல்
(திருச்சபையின் 250ம் ஆண்டு நிறைவு விழா மலர் ; 1706 - 1756)
சென்னை, 1955.

2 சீகன்பல்கின் சிறிய வெளியீடுகள்
பதிப்பாசிரியர்: டபிள்யு. காலண்ட், ஆம்ஸ்டர்டாம் 1930.

3 லேமன், ஆர்னோ. ,
திராவிட இயற்றுறையில் ஜெர்மானியரின் ஆய்வு. ,
டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளி விழா மலர், 1961.

4 சீகன்பல்க் எழுதிய மலபாரிய மக்களின் புறச்சமயக் கொள்கை. ,
பதிப்பித்தவர்: டபிள்யு. காலண்டு.

5 மலபாரிய மக்கள் கடவுளரின் குடிவழிப்பட்டியல்: சீகன்பல்க்
பதிப்பாசிரியர்: ெகர்மன், சென்னை, 1867.

6 புதிய எற்பாடு, சீகன்பல்க், தரங்கம்பாடி, 1714.

7 ஷ்வார்ட்ஸ், ஒல்ஃப்கங். ,ஹோர்ஸ்ட் ஷ்லிவன். , இந்தியா – ஐரோப்பா:
கடிதங்களில் இரு உலகங்கள், விட்டென் -பெர்லின், 1961.

8 ''கிரமாட்டிகா டமுளிக்கா''. , சீகன்பல்க்., ஆர்ஃபனேஜ் அச்சகம்.
ஹல்லே - ஆன் – த – ஸால. , கிழக்கு ஜெர்மனி

9 லேமன்,ஆர்னோ. ,
திராவிட இயற்றுறையில் ஜெர்மானியரின் ஆய்வு. ,
டாக்டர் ரா. பி. சேதுப்பிள்ளை வெள்ளி விழா மலர், 1961.

10 பெய்த்தான், ஹெர்மன்.,
தமிழ்மொழியின் நடைமுறை இலக்கணம், லைப்சிக், 1943.

11 மலபார் — ஆங்கில அகராதி, ஃபப்ரீஸியுஸ், யோஹன் ஃபிலிப்., பிரைட்ஹாப்ட், கிறிஸ்டியன்; வேப்பேரி, சென்னை, 1779.

12 கிறிஸ்தவத் தமிழ்த் தொண்டர், ரா. பி. சேதுப்பிள்ளை, பதிப்பித்தவர்:
எஸ்.ஆர். சுப்பிரமணியபிள்ளை, சென்னை, 1945: பக். 73.

13 12ல் கண்டபடி., அநுபந்தம்: பக் 76.

14 தரங்கம்பாடியிலிருந்து வந்தவாசி கூடலூர் வழியே சென்னை சென்றபோது வரைந்த தாவர இயற் குறிப்புகள் (19. 12. 1799 முதல் 16.1.1780 வரை)

15 12ல் கண்டபடி., அநுபந்தம் : பக். 3.

16 ஷ்மிட், பெர்ன்ஹார்ட்., நீலகிரிப்பெரணிகள், லின்னேயா, பகுதி 8., ஜூலை 1851., சென்னை இலக்கிய —விஞ்ஞான இதழ் எண் 5, (அக்டோபர் — டிஸம்பர்) 1857.

17 மன்னனின் பாதிரியார்; லில்ஜெ, ஹன்ஸ் (ஓர் இந்தியச்சிறு நாவல், ஹாம்புர்க் 1955.

18 பிப்ளியோதெகா தமுளிகா (தமிழ் நூற் பட்டியல்) லைப்சிக், 1854.

19 ஷ்வைட்ஸர், அல்பர்ட், இந்திய அறிஞரின் வாழ்க்கைத் தத்துவங்கள் : ஆன்மீகச் சார்பும் நீதிநெறியும், ம்யூனிச், 1935.

20 கிழக்கிந்தியப்பயணம், தந்தை பாலினுஸ் (ஃப்ரா பாலினோ த எஸ். பார்த்தலோமியா) ரோம் 1796,

21. இந்தியயியல் - ஈரானியல் மறுசீராய்வு, பகுதி 3., பக்.81',

22. ஹைன கெல்டர்ன், பி, டபிள்யு. ஷ்மிட் நினைவு மலர், வியன்னா, 1928.

23. ஹ்ரோஸ்னி, பி', ஆதிமக்களின் இடப்பெயர்ச்சியும், பண்டைய இந்திய நாகரிகமும், ப்ராக், 1939.

24. ஐக்ஷ்டட், பரோன் எகான் ஆஃப், கிழக்கு ஆசியா, சீனா, ஜப்பான், தாய்லாந்து, க்மெர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஊக்கமும் ஆற்றலும் மிக்க இனத்தவர்: தொன்று தொட்டு இன்று வரை, பெர்லின், 1943.

25. ஷ்யோனர், எ.க்ளெமென்ஸ், பழந்திராவிடம் பெயர்கள் பற்றிய ஆய்வு எர்லாங்கன் 1927

26 ஷோமருஸ், ஹில்கோ வியார்டோ, திராவிட இலக்கியங்கள் (பக். 272 - 318) — துவக்கத்திலிருந்து இன்றுவரை இந்திய இலக்கியம்; குறிப்பேடு, வில்ட்பார்க்—போட்ஸ்டம், 1929,

27 இந்தியாவும், கிறிஸ்துவமும்; 3 பாகங்கள், ஹல்லே/சால 1931, 1932, பெர்லின் 1933.

ஜெர்மானிய ஆசிரியர்களின் நூற்பெயர்க்கோவை (கால வரிசைப்படி)

கிர்ஷெர், அதெனாசியுஸ் (1602-1680)
சீனா பற்றிய தெளிவாக்கம்; ஆம்ஸ்டெர்டாம், 1667.

சீகன்பல்க், பார்த்தலோமியுஸ் (1682-1719)
1 பைபிள் (தமிழ்) தரங்கம்பாடி, 1714.
2 பிப்ளியோதெகா மலபாரிகா (தமிழ் நூல் பட்டியல்)
3 மலபார் (தமிழக) தெய்வங்களின் குடிவழிப்பட்டியல் (1713ல் எழுதி முடிக்கப்பெற்றது)
4 நீதி வெண்பா
5 கொன்றை வேந்தன்
6 உலகநீதி

7 தமிழ் - ஜெர்மானிய மொழி அகராதி

8 தமிழ் இலக்கணம் :
பல எடுத்துக்காட்டுகள், விதிகள், சொல் அட்டவணை கொண்டது. தமிழ் என்ற மலபாரி மொழியினை சுலபமாகப் பயிலும் வழி: இம்மொழி கிழக்கிந்தியரிடை பேசப்படுவது: இதுவரை ஐரோப்பாவில் அறியப்படாதது, 1716, 128 பக்

9 கிழக்கு இந்தியாவிலிருந்து டேனிஷ் அரசு பாதிரியார்கள் அனுப்பிய நடவடிக்கை அறிக்கைகள், முதற்பகுதி, ஹல்லே, 1718

10 விரிவான அறிக்கை: 29 - 8 - 1708

11 1718 - 1729ல் போது எழுதப்பட்ட கடிதங்கள். டேனிஷ் மத குருக்களுக்கும், இந்தியர்களுக்கும் இடையே நடைபெற்ற கருத்துப்பரிமாற்றங்கள். கிழக்கிந்தியக் கம்பெனியின் ஆணையர் ஒருவரால், ஆங்கிலத்தில் மொழி பெயர்க்கப்பட்டது. ஜான்ஸன், லண்டன், 1812 183 பக்

க்ருயுண்ட்லர் ஜெ. இ. (1677 - 1720)

1 ஹல்லேயின் அறிக்கைகள், 1, 861பக்

2 தமிழக மருந்துகள்,

பிலிப்ஸ், ஜெ. தாமஸ்

டேனிஷ் மதகுருக்களுக்கும், மலபாரி (தமிழக) பிராமணர்களுக்கும் இடையே நடைபெற்ற கருத்துப்பரிமாற்றங்கள்; டச்சு மொழியினின்றும் ஆங்கில மொழிபெயர்ப்பு; மியர்ஸ், டபிள்யு, ப்ரௌன்; ஜெ; லண்டன், 1729, 352 பக்.

வால்டர் க்றிஸ்டோஃப் த்யோடோஸியுஸ்

சாதாரணத் தமிழின் இலக்கணம், தரங்கம்பாடி, 1739, 60 பக்.

ஃபாபிரிஸியுஸ், யோஹன் ஃபிலிப் (1711 – 1791)

மலபார் (தமிழ்) — ஆங்கில அகராதி; தரங்கம்பாடி, 1779.

பிரைட் ஹாப்ட், கிறிஸ்டியன்

மலபார் (தமிழ்) — ஆங்கில அகராதி, தரங்கம்பாடி, 1779.

தந்தை பாலினுஸ்

1 கிழக்கு இந்தியப் பயணம்; ஜெர்மன் மொழியினின்று ஆங்கில மொழிபெயர்ப்பு டேவிஸ், ஜெ. லண்டன், 1799.

2 கிழக்கு இந்தியப்பயணம்; யோஹன் ரைன்ஹோல்ட்; போஸ்டரின் குறிப்புகளுடன், பெர்லின் 1798. 478 பக்

3 கிரந்த எழுத்துக்களில் சமஸ்கிருதச் சொற்கள், ரோம், 1791, 326 பக்.

கெம்மரர், எ. எஃப்.

திருவள்ளுவர் கவிதைகளும், வாழ்க்கைக் கோட்பாடுகளும்

ந்யுரென்பெர்க், 1803

ஹோலென்பெர்க், எம் ஹெய்ச்.
கிழக்கிந்தியாவில் கிறிஸ்துவக் கோவில்களின் தோற்றம், 1822

ரோட்லர், யோஹன் பேட்டர் (1749-1836)

1 தரங்கம்பாடியிலிருந்து வந்தவாசி கூடலூர் வழியே சென்னைக்குப் பயணம் தாவரவியற் குறிப்புகள்

2. ஜெர்மானிய, ஆங்கில வழிபாட்டுப் பாடல்களின் மொழிபெயர்ப்பு

3. தமிழ் - ஆங்கில அகராதி, சென்னை, 1834

ரேனியுஸ், கார்ல் தியோஃபில் எட்வர்டு (1790 - 1838)

1. இலக்கண நூற்சுருக்கம், சென்னை, 1836

2. உருவ வழிபாடு

3. சூரியமண்டலம்

4. இயற்கை நிகழ்ச்சி

5. கால இயலும் வான இயலும்

6. சமய தத்துவம்

7. பூமி சாஸ்திரம்

8. வேத உதாரணத்திரட்டு

9. புதிய கோட்பாடு

10. தமிழ் ஆங்கிலம் ஜெர்மன் ஆகிய மொழிகளில் முதல் ஆயிரம் சொற்கள், தரங்கம்பாடி., 1855

11. ஞானோபதேச விளக்கம், வினாவிடை, சென்னை 1825

12. மோட்சமார்க்கம், சென்னை, 1834

ஃப்ரோலிக், ரிச்சர்ட்,
தமிழ் மக்களின் சமயம். அறிமுக விளக்கமும், திறனாய்வும் லைப்சிஃக், 1829, 67பக்

ருய்க்கெர்ட், ஃப்ரிட்ரிஃக்
ஜெர்மன் - தமிழ் அகராதி, 1839 (அச்சேறி வெளியாகவில்லை)

ஷ்மிட், பெர்ன் ஹார்ட் (1787 - 1857)
தமிழ் - ஜெர்மானிய / ஜெர்மானிய - தமிழ் மொழி பெயர்ப்புகள்

க்ரொவுல், கார்ல் (1814 - 1864)

1. தமிழ் மொழியின் பொதுக்கோட்பாடுகள், தரங்கம்பாடி 1855

2. தமிழ் நூற்பட்டியல் (மூன்று பாகங்கள்) லைப்சிஃக் 1854

3. தமிழ் இலக்கணச்சுருக்கம், லைப்சிஃக், 1855

4. ஜுலை 1849 முதல் ஏப்ரல் 1853 வரை, பாலஸ்தீனம் எகிப்து வழியே மேற்கொண்ட கிழக்கிந்தியப் பயணம் பாகம்5; தென்கிழக்கு இந்தியாவும், இலங்கையும், டோர்ஃப்லிங், ஃப்ராங்க்க, லைப்சிஃக், 1856. 362 பக்

செர்மன், டபிள்யு

1. பதிப்பாளர் சீகன்பல்கால் எழுதப்பட்ட ''மலபார் மக்கள் கடவுளரின் குடிவழிப் பட்டியல்'' சென்னை 1867

2. புனித தாமஸின் கோவில், க்யுடெர்ஸ்லோ, 1877

3. சீகன்பல்கும், ப்ளுட்ஷாவும்; தரங்கம்பாடித் திருச்சபையின் நிறுவன ஆண்டுகள். கையெழுத்துப் பிரதிகளினின்றும், பழைய நூல்களின்றும் அறியப்படுவன, எர்லாங்கன்1868, 198 பக்

ஹெர்மன், ஜி.

கார்ல் க்ரொஃவுலும், லூதரன் திருச்சபையில் அவரது முக்கியத்துவமும், ஹல்லே, 1867, 234 பக்

பெய்ர் லைன், இ. ஆர்.

1. கிழக்கிந்திய எவேஞ்சலிக்கல் மிஷன், லைப்சிஃக், 1872, 160 பக்.

2. தமிழரின் நாடும் அதன் திருச்சபைகளும், ஹிக்கின் பாதம்ஸ் அண்ட் கோ, சென்னை, 1875, 173 பக்.

ஸிம்மர், ஹைன்ரிஃக்

பழம் இந்திய வாழ்வு; வேதகால ஆரியரின் பண்பாடு, பெர்லின், 1879.

ஜெரிங், ஹன்ஸ்

1. தமிழரும் அவரது நாடும், லைப்சிஃக், 1891, 64 பக்.

2. தென்னிந்தியா: தமிழக மக்களும் அவர்தம் நாடும், க்யுடெர்ஸ்லோ, 1899, 24 பக்.

3. தமிழ்நாடு, அதன் மக்களும், திருச்சபையும், லைப்சிஃக், 1927, 106 பக்.

ஷ்மிட், எமில;

தென்னிந்தியப் பயணம், லைப்சிஃக், 1894, 314 பக்.

யுஸ்ட், இ.

சித்தாந்தம் அல்லது நவீன சைவத்தின் கோட்பாடு, லைப்சிஃக், 1897, 28 பக்.

ஹுல்ட்ஷ், இ. (1857-1927)

தென்னிந்தியக் கல்வெட்டுகள், பாகங்கள் 1 - 3, சென்னை 1890 - 1903.

ஹண்ட்மன், ஆர்;

புதிதாக நிர்மானமானபோது எவேஞ்சலிக்கல் லூதர் தமிழகத் திருச்சபை, லைப்சிஃக், 1903, 477 பக்

கார்ப, ரிச்சர்ட் (1857 - 1927)

1 இந்தியப் பண்பாட்டு வரலாறு, பெர்லின், 1903.

2 இந்தியாவும் கிறித்துவமும், ட்யூபிங்கன், 1914 வெக்கர், ஒ, புத்தமதத்தின் மீது கிறிஸ்த்துவ மதத்தின் இயக்க விளைவு, இறையியல் காலாண்டு இதழ், 92, ட்யூபிங்கன், 1910.

பெக், கார்ல்.,
புனித தாமஸ் இந்தியாவில் கிறித்துவத்தைப் போதித்தாரா? ரடோல்ஃப்செல் (தனியார் பதிப்பு) 1911.

கார்ப ரிச்சர்ட்,
இந்திய மக்களின் பண்பாடு, கலைபற்றியன.

கார்ல் பெடக்கர்,
இந்தியா, லைப்சிஃக், 1914

ஃப்ரோலிஃக், ஆர்.
தமிழரின் சமயம், லைப்சிஃக் 1915

நவ், ஹெய்ச்,
பட்டினத்துப்பிள்ளையார் பாடல், ஓர் அறிமுகம்.

ஃபெய்த், அல் ஃபோன்ஸ்,
1. இந்தியாவில் ஜெர்மானிய கத்தோலிக்க குருமார்கள், ரேகன்ஸ்புர்க், 1920
2. புனிததாமஸ்: இந்தியாவின் புனித தூதர்

ஸிம்மர், ஹைன்ரிக்; கர்மன்
புத்த இதிகாச மலர்த்தொகுப்பு, ம்யூனிச், 1923.

கேலண்ட், டபிள்யு.
1. சிகன்பல்க்கினால் எழுதப்பட்டமலபாரிய புறச்சமயப்பகுதிகள், ஆம்ஸ்டர்டாம், 1926
2. சிகன்பல்கின் சிறு வெளியீடுகள், ஆம்ஸ்டர்டாம்,1930.

ஷ்யோனர், எ. க்ளெமென்ஸ்;
பழம் திராவிடம்: பெயர்கள் பற்றிய ஆய்வு, எர்லாங்கன், 1927.

ஷோமரூஸ், ஹில்கோ வியார்டோ.
1. காரைக்கால் அம்மையார், ஆண்டாள் ஆகியோரின் பாடல்கள்
2. இலக்கிய வழிகாட்டி நூல், வில்ட்பார்க், 1929.
3. சைவ சித்நாந்தம், லைப்சிஃக், 1912, 444 பக்.
4. மாணிக்கவாசகர் பாடல்கள், யேனா, 1923, 215 பக்.
5. சைவ சித்தாந்த புனித புராணக்கதைகள், யேனா, 1925, 306 பக்.
6. இந்தியாவும் கிறித்துவமும் : 3 பாகங்கள், ஹல்லே/சால 1931, 1932, பெர்லின், 1933.

7. ஆசிரியர் எக்கர் ஹார்ட்டும், மாணிக்கவாசகரும், க்யுடர்ஸ்லோ, 1936, 191 பக்.

8. இந்தியாவில் அரசியலும், மதமும்; லைப்சிக், 1928, 100 பக்.

9. இந்திய முக்தி வழி, லைப்சிக், 1919, 232 பக்.

10. பைபிள் இந்திய அடிப்படையிலானதா? ம்யூன்சென், 1932, 182 பக்.
அச்சடப்படாதவை: விநாயகபுராணம், சிவஞானசித்தியார், சிதம்பர மகாத்மியம்.

க்ளெஸெனப், ஹெல்முத் ஃபான் பதிப்பாசிரியர்: இலக்கிய வழிகாட்டிநூல் துவக்கத்திலிருந்து இன்று வரை, இந்திய இலக்கியம், வில்ட்பார்க் போட்ஸ்டம்; 1929.

மெர்க்கல், எஃப்.
மறக்கப்பட்டதோர் மத ஆய்வாளர், பெர்லின், 1933, பக். 234 - 235.

பெய்த் அல்ஃபோன்ஸ்,
''இந்தியர்கள்'', ஃப்ரைபுர்க், 1934.

ஷ்வைட்ஸர், அல்பெர்ட்:
1. உலகுபற்றி இந்திய அறிஞரின் கருத்துக்கள்: ஆன்மீக சார்பும், நீதிநெறியும், ம்யூனிச் 1935.

2. இந்திய எண்ணங்களும் அதன் வளர்ச்சியும், லண்டன், 1951, 272 பக்.

கோல், யோஸெஃப்,
திருச்சிராப்பள்ளி சிவன் கோவில்களில் காணும் இராசி மண்டலங்கள். ஜெர்மானியப் பத்திரிக்கையொன்றில் வெளிவந்த கட்டுரை, 1938.

ஹ்ரோஸ்னி, பி.
ஆதிமக்களின் இடப்பெயர்ச்சியும் பண்டைய இந்திய நாகரிகமும், ப்ராக், 1939

க்ரேஃப, டபிள்யு
1. தமிழ் இலக்கியங்களில் மைல்கற்களாக விளங்கும் புராணக்கதைகள் (பி. கே. கோடே நினைவு மலரில் வெளியிடப்பட்டது).

2. நன்னூல் - ஜெர்மன் மொழிபெயர்ப்பு, 1942.

அல்ஸ்டோர்ஃப், எல்.
இந்திய - ஜெர்மானிய ஆன்ம இயல் உறவுகள், 1942.

பரோன் எகான் ஆஃப் ஐக்ஷ்டட்,
கிழக்கு ஆசியா, சீனா, ஜப்பான், தாய்லாந்து, க்மெர் ஆகிய நாடுகளைச் சேர்ந்த ஊக்கமும் ஆற்றலும் மிக்க இனத்தவர். தொன்றுதொட்டு இன்றுவரை, பெர்லின், 1943.

ஸிம்மர், ஹைன்ரிக்
1. இந்தியக்கலை — நாகரிகத்தில், புராணங்களும் இடுகுறிகளும், நியூயார்க், 1946, 248 பக். (மறுபதிப்புகள், 1947, 1952),

2 இந்திய — ஆசியாவின் கலை: அதன் புராண இலக்கியங்களும் மாற்றங்களும், 2 பாகங்கள், நியூயார்க், 1955.

பெய்த்தான், ஹெர்மன்.
தமிழ் மொழியின் நடைமுறை இலக்கணம், லைப்சிஃக், 1943.

லேமன், ஆர்னோ.
1. தமிழக பக்தி இலக்கியங்களில் காணும் சிவபக்தி, பெர்லின், 1948 (தேவாரப்பாடல்கள் கொண்டது)

2. தாயுமானவர் பாடல்கள், க்யுடெர்ஸ்லோ, 1935, 270 பக்.

3. ஜெர்மானிய—இந்திய உறவுகளின் துவக்கத்தின் போது ஹல்லேயின் மருத்துவர்களும் மருந்துகளும், மார்ட்டின் - லூதர் பல்கலைக்கழகம், ஹல்லே - விட்டன்பெர்க்.

4. ''அது தரங்கம்பாடியிற் துவங்கிற்று'', மார்ட்டின் ஜெ. லுட்ஸின் ஆங்கில மொழி பெயர்ப்பு, சென்னை, 1956, 185 பக்.

5. இந்தியாவிலிருந்து வந்த பழங்கடிதங்கள், பார்த்தலோமியுஸ் சிகன்பல்கின் வெளிவராத கடிதங்கள், 1706— 1719, பெர்லின், 1957, 552 பக்.

9. திராவிட இயல்பற்றி ஜெர்மானியஆய்வு, டாக்டர் ஆர்.பி. சேதுப்பிள்ளை வெள்ளி விழா மலர், சென்னை, 1961.

7. ஜெர்மானியரின் தமிழ் ஆராய்ச்சி, தமிழ் ''கல்ச்சர்'' மலர், 9, எண். 2, ஏப்-ஜுன், 1961.

ஸ்ரெர், ஒட்டோ.
இந்தியா-இஸ்லாம் பற்றிய கதைகள், நான்கு பாகங்கள், ம்யூனிச், 1955.

க்ளெஸெனப், ஹெல்முத் ஃபான்.
இந்தியரின் மதங்கள், ஸ்டுட்கார்ட். 1955, 80 பக். பெராய்தர், எரிஃக், பார்த்தலோமியுஸ் சீகன்பல்க், சென்னை, 1956.

விக்கி, யோஸெஃப்.
கான்ஸலோ, ஃபெர்னான்டஸின் நூல், பிராமணர்களையும் தர்ம சாஸ்திரத்தையும் பற்றியது (மதுரை); ம்யுன்ஸ்டர், 1957, 36 பக்.

ஷ்வார்ட்ஸ், ஒல்ஃப்கங்., ஹோர்ஸ்ட் ஷ்லிவென்
இந்தியாவும் ஐரோப்பாவும்: கடிதங்களிற் காணும் இரு உலகங்கள், விட்டன் அண்ட் பெர்லின், 1961.

லேமன், கெர்ட்ரவுட்
1. இந்தியாவில் நான் திருமணம் செய்கிறேன், பெர்லின், 1940

2. நாகமல்லா - கோவில்யானை, எர்லாங்கன், 1953.

3. அறுந்த தந்திகள், இந்திய நாவல், 3ம் பதிப்பு, பெர்லின், 1954, 104 பக்

4. ஒளிருந் தடங்கள், மரியாடோரதியா; சிகன்பல்கினின் வாழ்க்கை, 1960, 16 பக்

ஃப்ரென்ஸ், அல்பிரஷ்ட்

1. மாணிக்க வாசகரின் திருவாசகம். காரைக்குடி 1977

2. திருவள்ளுவரின் திருக்குறள், மதுரை 1977

வால்ட்டர் லைஃபரின் தென்னிந்திய - ஜெர்மானிய உறவு பற்றிய வெளியீடுகள்;

1. பண்டைய இந்திய - ஜெர்மானியத் தொடர்பு, யுனைடெட் - ஏஷியா, பம்பாய் பெப்ருவரி, 1960, பக் 59 - 62

2) ஜெர்மானியும் தென்னிந்திய ஆய்வும், கேரளமெயில், கொச்சி, 26. 6. 60, 3. 7. 60 10. 7. 60, 17. 7. 60.

3) மதகுருக்களாக வந்த அறிஞர்கள், "த எக்ஸாமினர், பம்பாய்." 30. 4. 66 பக். 277- 279, 282.

4) பண்டைய இந்திய- ஜெர்மானிய உறவுகள், "த இல்லஸ்டிரேட்டெட் வீக்லி ஆஃப் இந்தியா," பம்பாய், மே 5, 1968.

5) இந்தியாவும் ஜெர்மானியரும்: 500 ஆண்டுக்கால இந்திய ஜெர்மானிய உறவுகள் ஹோர்ஸ்ட் எர்ட்மன் ஃபெர்லாக், ஜெர்மனி, 1971.

6) இந்தியாவும், ஜெர்மானியரும்: 500 ஆண்டுக்கால இந்திய - ஜெர்மானிய உறவுகள் (இரண்டாம் பதிப்பு) சகுந்தலா வெளியீட்டில்லம், பம்பாய், 1977.

மதுரை இறையியல் கல்லூரியின் நூலகத்தே ஜெர்மானியரால் எழுதப்பெற்ற அரிய சில நூல்கள் உள்ளன, அவைகளாவன :

1. ஞானப் பாட்டுகளின் பொஷ்தகம் (ஜெர்மன் கிறித்துவப் பாடல்களின் தமிழாக்கம்) பென்ஜமின் ஷூல்ஸே, தரங்கம்பாடி, 1723.

2. ஆங்கில-மல்பார் மொழிகளின் அகராதி, வேப்பேரி, சென்னை 1786, (ஆசிரியர் தெரியவில்லை)

3. கிறிஸ்துவின் ஞானப்பாட்டுகள் (ஜெர்மானியப் பாடல்களின் தமிழாக்கம்) (ஆசிரியர் தெரியவில்லை) சென்னை 1820.

4. புதிய ஏற்பாடு. கிரேக்க மொழியினின்றும் தமிழாக்கம், சி. டி. இ. இரேனியுஸ் சென்னை 1836.

5. புதிய ஏற்பாடு, கிரேக்க மொழியினின்றும்தமிழாக்கம், செய்யப்பட்டது, ஃபப்ரீசியுஸ், சென்னை 1843.

6. புனிதபைபிள்
பழைய ஏற்பாடு: ஜெ. பி. ஃபப்ரீசியுஸ்
புதிய ஏற்பாடு. சி. டி. இ. இரேனியுஸ்
சென்னை 1844.

7. தமிழ் – ஆங்கில அகராதி
(ஃபப்ரீசியுசின் அகராதியை அடிப்படையாகக் கொண்டது)
மிரன் வின்ஸ்லோ
பதிப்பித்தவர் : பி. ஆர். ஹண்ட்
சென்னை 1862.

8. ஞானப்பாட்டுகளின் புஸ்தகம்
(ஜெர்மானியப் பாடல்களின் தமிழாக்கம்)
ஃபப்ரீசியுசின் பாடற்புத்தகம், 7ம் பதிப்பு, தரங்கம்பாடி 1869.

9. தென்னிந்தியக் கடவுளரின் குடிவழிப்பட்டியல்: தென்னிந்தியக் கடவுளரின் புராணக்
கதைத் தொகுதியும் மதமும் பற்றிய நூல் (ஆங்கில மொழி பெயர்ப்பு), பார்த்தலோ
மியுஸ் சீகன்பல்க், பதிப்பித்தவர். டபிள்யு. கெர்மன், சென்னை 1869.

10. தமிழ் - ஆங்கில அகராதி
ஃபப்ரீசியுசை அடிப்படையாகக் கொண்டது
மூன்றாம் பதிப்பு, திருத்தி விரிவாக்கப்பட்டது, தரங்கம்பாடி 1933.

11. பார்த்தலோமியுஸ் சீகன்பல்க், எரிக் பேராய்த்தர்,
ஆங்கிலப்பதிப்பு, சென்னை1955.

தமிழாக்கம் செய்யப்பெற்ற ஜெர்மானிய இலக்கியங்களும், மற்றும் சில அறிவியல் நூல்களும்

1. ஷ்வைட்ஸரின் சுயசரிதம் (அல்பெர்ட் ஷ்வைட்ஸர்)
கே. என். சுப்ரமணியம்
ஓரியண்ட் லாங்மன்ஸ் வெளியீடு

2. சித்தார்த்தன் (ஹெர்மன் ஹெஸ்ஸெ")
திரிலோக சீதாராம்
பதிப்பாளர் :எ. கே. கோபாலன்

3. இளமைப்போராட்டம் (ஹைன்ரிக் போல்)
கே. கோபிநாதராவ்
தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட் வெளியீடு. சென்னை

4. வஸ்து (கெத்தே)
எ. துரைசாமி பிள்ளை
சாகித்ய அகாடமி வெளியீடு

5. தற்கால ஜெர்மானியச் சிறுகதைகள்
தென்மொழிகள் புத்தக டிரஸ்ட்
ஹோர்ஸ்ட் ஹெர்ட்மன் ஃபெர்லாக் வெளியீடு, சென்னை 1968.

6. ஜெர்மானிய இலக்கியத்தின் சிறப்புப் பகுதிகள்
ஹோர்ஸ்ட் எர்த்மன் ஃபெர்லாக் ஆஃப் துபிங்கள் (மேற்கு ஜெர்மனி)
அண்டு பாஸல் (ஸ்விட்ஸர்லாந்து) சென்னை, 1971.

7. பறக்கும் வகுப்பறை
ஆசிரியர் : எரிக் காஸ்ட்னர்
மொழிபெயர்ப்பாளர் : மணவை முஸ்தாஃபா
தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட்
ஹோர்ஸ்ட் எர்ட்மன் ஃபெர்லாக் 1971.

8. அறிவியல் கண்டுபிடிப்புக்களின் வரலாறு : ஆற்றல், பாகம் - 1,
எகான் லார்சன்
மொழிபெயர்ப்பாளர் : கே. ராஜாராம்
தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட்,
ஹோர்ஸ்ட் எர்ட்மன் ஃபெர்லாக் 1977.

9. அறிவியல் கண்டுபிடிப்புக்களின் வரலாறு பாகம் - 2 : போக்குவரத்து
எகான் லார்சன்
மொழிபெயர்த்தவர் : மணவை முஸ்தாஃபா
தென்னிந்திய மொழிகள் புத்தக டிரஸ்ட்
ஹோர்ஸ்ட் எர்ட்மன் ஃபெர்லாக் 1978.

10. அறிவியல் கண்டிபிடிப்புக்களின் வரலாறு பாகம் - 3 : செய்தித் தொடர்பு
எகான் லார்சன்
மொழிபெயர்த்தவர்கள் : கே. எல். மகாதேவன், கே. இராஜாராம் 1979.

தமிழகத்தில் ஜெர்மானிய மொழி பயில வாய்ப்பளிக்கும் கல்வி/ ஆராய்ச்சிக் கூடங்கள்

கோவை : 1. பாரதிய வித்யா பவனம்
2. கோயம்புத்தூர் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி

கடலூர் : கரும்பு ஆராய்ச்சி நிலையம்

காரைக்குடி : மைய மின்வேதி ஆய்வகம்

சென்னை : 1. பாரதிய வித்யா பவனம்
2. கிறித்துவக் கல்லூரி
3. லயோலா கல்லூரி
4. இந்தியன் இன்ஸ்டிடியூட் ஆஃப் டெக்னாலஜி
5. சென்னை பல்கலைக்கழகம்
6. மாக்ஸ் ம்யுலர் பவனம்

மதுரை : 1. லேடி டோக் கல்லூரி
2. மதுரை - காமராஜ் பல்கலைக்கழகம்
3. தமிழ்நாடு இறையியற் கல்லூரி

நெய்வேலி :	நெல்வேலி லிக்னைட் கார்ப்பரேஷன் பொறியியல் - அறிவியல் வல்லுநர் கழகம்
உதகமண்டலம் :	1. ஹெப்ரான் பள்ளி 2. ஹிந்துஸ்தான் ஃபோட்டோ ஃபில்ம்ஸ் 3. இந்திய - ஜெர்மானிய நீலகிரி முன்னேற்றத்திட்டம்
திருச்சிராப்பள்ளி ;	பாரத்ஹெவி எலக்டிரிக்ல்ஸ் லிமிடெட்
விருத்தாச்சலம் :	முந்திரி ஆய்வு நிலையம்

தமிழிலக்கியத்தினை ஆராய்ந்துள்ள ஜெர்மானிய ஆசிரியர்கள்

அல்ஸ்டார்ஃப், லுட்விக்	Alsdorf, Ludwig
அன்டோன், ஹெல்கா	Anton, Helga,
பெய்ர்லைன், இ. ஆர்.	Baerlein, E. R.,
பெராய்தர், எரிஃக்	Beyreuther, Erich
பெதான், ஹெர்மன்	Beythan, Hermann
பிரைட் ஹாப்ட், கிறிஸ்டியன்	Breithaupt, Christian
கெமரர், எ. எஃப்	Caemmerer, A. F.,
காலண்ட், டபிள்யு	Caland, W
டால்மன், யோஸெஃப்	Dahlmann, Joseph
ஐக்ஷ்டட், பரோட் எகான் ஆஃப்	Eickstedt, Baron Egon of
எல்வைன்	Ellwein
ஃபப்ரீசியுஸ், யோஹன் ஃபிலிப்	Fabricius, Johann Phillip
ஃப்ரென்ஸ், அல்பிரெஷ்ட்	Frenz, Albrecht
ஃப்ரோலிஃக், ஆர்	Froelich, R
கார்ப, ரிச்சர்ட்	Garbe, Richard
கெரிங், ஹன்ஸ்	Gehring, Hans
கெர்மன், டபிள்யு	Germann, W
க்ளெஸனப், ஹெல்முத் ஃபான்	Glasenapp, Helmuth von
க்ராஃப; டபிள்யு	Grafe, W
க்ரௌவுல், கார்ல்	Graul, Karl
க்ருண்ட்லர், ஜெ. இ.	Gruendler, J. E.
ஹேபர்லின்,	Haberlin
ஹண்ட்மன், ஆர்.	Handmann, R
ஹௌக், மார்ட்டின்	Haug, Martin
ஹெக், கார்ல்	Heck, Karl
ஹைன கெல்டர்ன், ஆர்	Heine Geldern, R
ஹோலென்பெர்க், எம். ஹெய்ச்	Hohlenberg, M. H
ஹெல்மன்	Hellmann,
ஹெர்மன், ஜி	Hermann G
ஹோர்ஸ்ட்	Horst
ஹுல்ட்ஷ், ஆய்கன்	Hultsch, Eugen
யானர்ட், கே. எல்.,	Janert, K. L.
யுஸ்ட், இ.	Just, G

கால், ஓ.	Kahl, O
கப், டி	Kapp, D
கிர்ஷெர், அதனாசியுஸ்	Kircher, Athanasius
கோல், யோஸெப்	Kohl, Joseph
லேமன், ஆர்னோ	Lehmann, Arno
லேமன், கெர்ட்ரவுட்	Lehmann, Gertraud
லைஃபர் வால்ட்டர்	Leifer, Walter
லில்யே, ஹன்ஸ்	LiljeHanns
மேயர், எவெலின்	Meyer, Eveline
ம்யுலென்வேக், ரெஜினா	Muehlenweg, Regina
மெர்க்கெல், எஃப்	Merkel, F
நவ், ஹெய்ச்	Nav, H
பெஸோல்ட்	Paezold, Father
பாலினுஸ், எ சாங்க்டோ பார்த்தலோமியோ	Paulinus a Sancto Bartholomaeo
பாய்டிங்கர், கோன்ராட்	Peutinger,Konrad
ப்ளுட்ஷோ, ஹைன்ரிஃக்	Plutschau Heinrich
ரேனியுஸ், கார்ல் தியோஃபில் எட்வர்டு	Rhenius, Karl Theosophil Edward
ரோட்லர், யோஹன் பேட்டர்	Rottler, Johann Peter
ருய்க்கேர்ட், ஃப்ரீட்ரிஃக்	Reeckert, Friedrich
ஷ்மிட், பெர்ன்ஹார்ட்	Schmidt Bernhard
ஷ்மிட், எமில	Schmidt, Emile
ஷ்யோனர், க்ளெமென்ஸ்	Schoener, Clemons
ஷோமருஸ், ஹில்கோ வியார்டோ	Schomerus, Hilko Wiardo
ஷ்ராடர் ஆட்டோ	Schrader, Otto
ஷ்வார்ட்ஸ், கிறிஸ்டியன் ஃப்ரீட்ரிபூக்	Schwarz Christian Fredrich
ஷ்வார்ட்ஸ், ஒல்ஃப் கங்	Sahwarz Wolfgang
ஷ்வைட்ஸர், அல்பெர்ட்	Schweitser, Albert
ஃபெய்த், அல்ஃபோன்ஸ்	Vaeth, Alfons
வெஸ்லர், அல்பிரெஷ்ட்	Wesler, Albrecht
வெக்கர், ஓ	Wecker, O
விக்கி, யோஸெஃப்	Wicki, Joseph
சீகன்பல்க், பார்த்தலோமியுஸ்	Ziegenbalg, Bartholomeus
ஸிரேர், ஓ	Zierer, O
ஸிம்மர் ஹைன்ரிஃக்	Zimmer, Heinrich
ஸ்வெலபில், கமில்(செக்கோஸ்லோவாகியா	Zvelebii, Kamil